செ. கு. எண்: 005 நாள் :10.01.2015

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களின்
அறிக்கை - 10.1.2015

---

தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளையொட்டி, தமிழர்களின் பண்டைய பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றை பிரதிபலிக்கும் வீர விளையாட்டாக ஜல்லிக்கட்டு தமிழகத்தில் பன்னெடுங்காலமாக நடத்தப்பட்டு வருகிறது. ஜல்லிக்கட்டு என்பது மஞ்சு விரட்டு, ஊர்மாடு, வடமாடு மற்றும் எருது விடும் விழா போன்றவற்றை உள்ளடக்கியதாகும். ஜல்லிக்கட்டு தொடர்பாக பல்வேறு வழக்குகள் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டு இறுதியாக கடந்த 7.5.2014 அன்று உச்சநீதிமன்றம் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிக்கு ஒட்டுமொத்த தடை விதித்து தீர்ப்பளித்துள்ளது. இந்த சூழ்நிலையில், வரும் பொங்கல் திருநாளையொட்டி ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி நடத்தப்படுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை தமிழக அரசு எடுக்க வேண்டும் என்று பல்வேறு தரப்பினரும் கோரி வருகின்றனர். தமிழர்களின் பாரம்பரியத்தினை பிரதிபலிக்கும் வகையில் நடைபெறும் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி இந்த ஆண்டு நடைபெறுவதற்கு இயன்ற அனைத்து நடவடிக்கைகளையும் தமிழக அரசு எடுத்து வருகிறது என்பதை முதற்கண் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

2006ம் ஆண்டு மதுரை மாவட்டத்திலுள்ள அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு நடத்துவதற்கு தடை விதிக்கக் கோரி திரு.நாகராஜ் என்பவரால் வழக்கு ஒன்று தொடரப்பட்டது. இந்த வழக்கு நிலுவையில் இருந்த போது ராமநாதபுரம் மாவட்டத்தில் மகா கும்பாபிஷேக திருவிழாவினையொட்டி மாட்டு வண்டி பந்தயம் நடத்த அனுமதி வேண்டி திரு.முனியசாமித்தேவர் என்பவர் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்தார். இம்மனுவினை விசாரித்த உயர்நீதிமன்றம் மாட்டுவண்டிப் பந்தயம் மற்றும் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி ஆகியவற்றிற்கு தடை விதித்து 29.3.2006-ல் உத்தரவு ஒன்றை பிறப்பித்தது.

இதனை எதிர்த்து, தமிழக அரசு 2006 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை அமர்வில் மேல்முறையீடு செய்தது. உயர்நீதிமன்ற அமர்வு நீதிமன்றம் 9.3.2007 அன்று பிறப்பித்த உத்தரவில் முழுமையாக கிராமப்புற விளையாட்டின் மீது தடை விதித்தது தவறு என்றும், முறைப்படுத்தி நடத்தலாம் என்றும் ஆணையிட்டது. இந்த தீர்ப்பினை எதிர்த்து, இந்திய பிராணிகள் நல வாரியத்தால் (ABWI) உச்சநீதிமன்றத்தில் சிறப்பு விடுப்புக்கால வழக்கு 9.7.2007 அன்று தாக்கல் செய்யப்பட்டது. உச்சநீதிமன்றம் 27.7.2007 அன்று உயர்நீதிமன்ற தீர்ப்பினை அமல்படுத்த தடை விதித்து ஆணை பிறப்பித்தது. மேற்படி தடையினை நீக்கக்கோரி விண்ணப்பங்கள் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, ரேக்ளா பந்தயம் மற்றும் ஜல்லிக்கட்டு ஆகியவை காவல் துறை மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் பிராணிகள் மற்றும் மனிதர்களுக்கு எவ்வித துன்புறுத்தலும் இல்லாமல் நடத்தப்பட உச்சநீதிமன்றம் அனுமதி அளித்தது.

உச்சநீதிமன்றம் தனது 15.1.2008 நாளிட்ட ஆணையில் ஜல்லிக்கட்டு நெறிமுறைகளை கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும் என்றும் பிராணிகளை பாதுகாக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டு ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்தது.

இதனடிப்படையில் தமிழ்நாடு அரசால் தமிழ்நாடு ஜல்லிக்கட்டு நெறிமுறை சட்டம் 2009 என்ற ஒரு சட்டம் இயற்றப்பட்டது.

25.11.2010 அன்று உச்சநீதிமன்றத்தால் வழங்கப்பட்ட இடைக்கால ஆணையில், மாவட்ட ஆட்சியர்கள், ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியில் பங்குபெறும் காளைகள், இந்திய பிராணிகள் நல வாரியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்ய வேண்டும் என்றும், அதே போன்று பிராணிகள் நல வாரியம் ஜல லிக்கட்டு நிகழ்வுகளை கண்காணிக்க அதன் பிரதிநிதிகளை அனுப்ப வேண்டும் என்றும், கால்நடை மருத்துவர்கள் குழு நிகழ்ச்சி நடைபெறும் இடத்திலிருந்து நிகழ்வுகளில் பங்குபெறும் காளைகளை பரிசோதித்து சான்று அளிப்பதுடன், காயம்படும் காளைகளுக்கு சிகிச்சை அளிப்பார்கள் என்றும், ஜல்லிக்கட்டு நிகழ்வின் போது, விபத்து அல்லது காயம் அடைகின்ற ஜல்லிக்கட்டு வீரர்கள் மற்றும் குடும்பத்தினர் பயன்பெறும் வகையில், ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி நடத்துபவர்கள் சிறிய நிகழ்வுகளுக்கு 2 லட்சம் ரூபாயும், பெரிய நிகழ்வுகளுக்கு 5 லட்சம் ரூபாயும் வைப்புத் தொகையாக செலுத்த வேண்டும் என்றும் விரிவான நெறிமுறை வழங்கப்பட்டது. இவ்வாணையினை எதிர்த்து பீட்டா (PETA) என்ற அமைப்பு வழக்கு ஒன்றைத் தொடுத்தது. உச்சநீதிமன்றம் இவ்வழக்கையும் மூலவழக்குடன் சேர்த்து விசாரிக்க ஆணையிட்டது.

இந்நிலையில், 2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்தின் பிராணிகள் நலப் பிரிவு, ஜல்லிக்கட்டு நிகழ்வு, பழக்கப்பட்ட விலங்கின் செயலைக் காட்சிப்படுத்துவது எனக் குறிப்பிட்டு, எனவே அவை தடை செய்யப்பட வேண்டும் என பரிந்துரைத்து பிராணிகளுக்கு இழைக்கப்படும் தீங்கினை தடுத்தல் சட்டத்தின் பிரிவு 22-ன் கீழ் புலிகள், கரடிகள் ஆகியவைகளுடன் காளையையும் சேர்க்க வேண்டும் என பரிந்துரைத்தது. இதன் அடிப்படையில், முந்தைய காங்கிரஸ் கூட்டணி அரசு தனது 11.7.2011 நாளிட்ட அறிவிக்கையில் காளையையும் இந்தப் பட்டியலில் சேர்த்து அறிவிக்கை ஒன்றை வெளியிட்டது.

ஜனவரி 2012-ல் திருமதி. ராதாராஜன் மற்றும் பிராணிகள் நல வாரியத்தினர், காளைகள் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியில் பங்கேற்பதை தடை விதிக்க கோரி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மனு ஒன்றை தாக்கல் செய்தனர். ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி நடத்துவதற்கு கூடுதல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை வகுத்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தமிழக அரசால் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அம்மனுவினை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை அமர்வு ஆய்வு செய்து, ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி கூடுதல் பாதுகாப்புடன் நடத்துவதற்கு அனுமதி வழங்கியது. 10.1.2013-ல் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையிலிருந்து இந்த வழக்கை உச்சநீதிமன்றத்திற்கு மாற்றம் செய்ய உச்சநீதிமன்றத்தால் ஆணையிடப்பட்டது.

7.5.2014 அன்று உச்சநீதிமன்றத்தால், தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகள் நடத்தவும், மகாராஷ்டிராவில் காளைமாட்டுப் பந்தயத்தை நடத்தவும் முழுமையான தடை பிறப்பித்து ஆணை வழங்கப்பட்டு இது தொடர்பான அனைத்து வழக்குகளும் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. மேலும் தமிழ்நாடு ஜல்லிக்கட்டு நெறிமுறை சட்டம் 2009, இந்திய பிராணிகள் வதை தடுப்புச் சட்டத்திற்கு முரணாக அமைந்துள்ளதால் அரசமைப்பு சட்டத்திற்கு எதிரானது என உச்சநீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டது.

உச்சநீதிமன்றத்தின் இந்த ஆணை ஜல்லிக்கட்டு நடத்தப்படுவதை முற்றிலும் தடை செய்து விட்டதால், இதனை எதிர்த்து 19.5.2014 அன்று தமிழ்நாடு அரசால் மறு ஆய்வு மனு (Review petition) உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மறு ஆய்வு மனு இன்னமும் நிலுவையில் உள்ளது.

தமிழர்களின் பாரம்பரிய நிகழ்ச்சியான ஜல்லிக்கட்டு தொடர்ந்து நடைபெற வழிவகை காணுமாறு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டதின் பேரில், உச்சநீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டதோடு, அது குறித்த பல்வேறு நடவடிக்கைகளையும் தமிழ்நாடு அரசும், தமிழக அரசின் உயர் அதிகாரிகளும் கடந்த பல மாதங்களாக எடுத்து வருகின்றனர். மத்திய அரசினை தொடர்பு கொண்டு, மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட அறிவிக்கையிலிருந்து காளையை நீக்கம் செய்ய தொடர் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் புது தில்லியிலுள்ள தமிழக அரசின் வழக்கறிஞர்களை தொடர்பு கொண்டு, தமிழக அரசால் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மறு ஆய்வு மனுவினை விரைவாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

7.1.2015 அன்று தமிழக அரசின் உயர் அதிகாரிகள் மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சக உயர் அலுவலர்களை நேரில் சந்தித்து, மத்திய அரசால் 11.7.2011 அன்று வெளியிடப்பட்ட அரசிதழில் 'காளைகளை' நீக்கும்படி வற்புறுத்தப்பட்டது. மத்திய அரசு அலுவலர்கள் துறை அமைச்சருடன் விவாதித்து அவ்வாறான அறிவிக்கையை வெளியிடுவதாக நம்பிக்கை தெரிவித்துள்ளனர். மேலும், ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதற்கு ஏதுவாக 1960 ஆம் ஆண்டைய இந்திய பிராணிகள் வதை தடுப்புச் சட்டத்தில் உரிய சட்ட திருத்தங்களை மேற்கொள்ளுமாறு வற்புறுத்தப்பட்டுள்ளது.

மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்தால் பழக்கப்பட்ட விலங்கினை காட்சிப்படுத்துவது என்ற பிரிவிலிருந்து காளைகளை உடனடியாக நீக்கி அறிவிக்கை வெளியிடக் கோரி தமிழக அரசின் உயர் அதிகாரிகள் வரும் 12.1.2015 அன்று மீண்டும் புது தில்லி சென்று மத்திய அரசின் உயர் அதிகாரிகளை சந்தித்து வற்புறுத்துவார்கள். இந்த அறிவிக்கையை மத்திய அரசு உடன் வெளியிடும் என நான் நம்புகிறேன். அவ்வாறான அறிவிக்கையை மத்திய அரசு வெளியிட்டு விட்டால், உச்சநீதிமன்ற உத்தரவுக்கு எந்தவித ஊறும் இல்லாத வகையில், ஜல்லிக்கட்டு நடத்துவதற்கான ஒரு புதிய அறிவிக்கையை தமிழக அரசு வெளியிட வழிவகை ஏற்படும். மத்திய அரசு அறிவிக்கையை வெளியிட்ட உடனேயே, இதற்கான நடவடிக்கையை உடன் எடுத்து, தமிழர்களின் பராம்பரிய ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியை உடன் நடத்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் தமிழ்நாடு அரசு எடுக்கும் என உறுதிபடத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஓ. பன்னீர்செல்வம்
தமிழ்நாடு முதலமைச்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**